முரசொலி

தமிழ் வார வெளியீடு....

ஆசிரியர் மு. கருணாநிதி.

சிறுத்தையின் உறுமல்! சிங்கத்தின் சீற்றம்! கறுத்த கழுதையே, அங்கேன் கனைக்கிறாய்?

விலை அணா 1 Regd. No. M

முரசு 1] திருவாரூர். பெரியார் ஆண்டு 69, பங்குனி 11 (24-3-48) புதன்கிழமை [ஒலி 11

அவரது கருத்து

பகவத் தரிசனம் — பகற்கனவே!

Crystal Gazing அதாவது மைபோட்டுப்பார்த்தல் என்பதும் ஓர் மாயவித்தை. இது நமது நாட்டிலும் வழங்கி வருகின்றது. ஸ்படிகக் கல்லையாகிலும், கண்ணாடியையாகிலும், வெற்றிலையில் மையைத் தடவியாகிலும், அதனைக் கூர்ந்துபார்த்தால் திருடின திருடனையும், புதைத்த பொருளையும், காணலாமென்பது ஓர் கதை. இவ்வளவு எளிதில் திருடனைக் கண்டு பிடிப்பதென்றால் துப்பறியும் சேவகா (Detectives) வேண்டியதில்லை, என்று தோன்றுகிறது! நான் சிறுவனாக இருக்கும்போது என் பெரிய தகப்பனார் வீட்டில் மை போட்டுப் பார்த்தார்கள். வெற்றிலையில் மையை இட்டு அதில் உற்று நோக்கச் சொன்னார்கள். அதில் பார்த்தபோது எனது கண்ணுக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஆனால் மற்றவர்கள் பார்த்து இதோ ராமர் வந்தார்! அதோ லட்சுமணர் வந்தார்! அதோ அனுமார் வந்தார்! என்று கூச்சலிட்டனர். இது அந்தக்காலத்தில் நமக்கு விளங்கவில்லை.

ஆனால், அதைத் தற்காலம் மெய்ஞ்ஞான வாயிலாக நோக்குமிடத்து இதுவோர் Self-hypnotism (இப்னடிசம) என்று தோன்றுகிறது. நினைத்ததை இரவில் கனவாகக் காண்பது போல் பகலில் கோரியதை இந்த Self-hypnotism என்ற பகற்கனவில காண்பது சகஜம். வேதாந்திகள், மூக்கின் முனையை உற்றுப் பார்க்கும் பழக்கத்தை கற்றுக்கொடுக்கின்றார்கள் அதுவும் ஓர் Self-hypnotism உண்டாக்கும் பழக்கமே. பகற்கனவில், நாம் கோரும் பொருள்கள் தோன்றும். இதை (Hallucination) என்பார்கள் பழுதையில் பாம்பைப் பார்ப்பதும் (Hallucination) அதாவது பகற்கனவே, அதுபோலவே, மையில், ராம, லட்சுமண, சீதா, அனுமானைப் பார்ப்பதும் (Hallucination) இந்தத் தோற்றங்கள் கண்கள் அயர்ந்த காலையில் உண்டாகின்றன.

கிறிஸ்தவ பக்தர்கள் (Christian Saints) ஏசுவை பாக்கறேன். தேவதைகளுடன் (Angels) பேசுகின்றேன் என்று சொல்வதெல்லாம் இந்த(Hallucination) அதாவது பகற்கனவே யாகும். மகமது நபி, ஓசை கேட்டதாக சொல்வதும், இந்தப் பகற்கனவே. நரம்பு வியாதியால் பீடிக்கப்பட்டவர்களுக்கு இவ்விதத் தோற்றங்கள் காண்பது சகஜமே. கண்களை மூக்கின் முனையில் நோக்கும்படி செய்தால் பலவித தோற்றங்கள் தோன்றும். அந்தத் தோற்றங்களை நமது இச்சைக்குத் தக்கவாறு அர்த்தப் படுத்திக்கொண்டு விநாயகர் வந்தார், காளி அம்மன் வந்தாள். அனுமான் தோன்றிற்று, பிரமத்தைக் கண்டேன் என்று பிதற்றுகின்றார்கள். இந்தப் பிதற்றல்களுக்கும் ஜன்னி கண்டு பிதற்றுவதற்கும் வித்தியாசம் அதிகமில்லை. ஆனால், ஒன்று நாமாக வரவழைத்துக் கொண்ட பிதற்றல். மற்றொன்று நம்மை

(8-ம் பக்கம் பார்க்க)

கையாலாகாதவன் கடவுள் துணையென்பான்.

கண்டதும் காதல் ஒழிக!

(மூனா கானா)

"முறுக்கு மசால்வடை!"

"கரம் சாயா!"

"சோடா, கலர், ஆரஞ்சு!"

"ரொட்டி பிஸ்கத் வெத்திலை பாக்கு அசோகா"

"எலிபெண்ட் சிகரெட், தாஜ் மகால் பீடி"

* * *

"எய் சாயா! ஒரு சிங்கிள் கொடடா"

"காலணா பீடி கொடு"

"அம்மா............எனக்கு ரொட்டி!"

"அப்பா.........சோடா வாங்கித் தா"

"சும்மா இருடா கழுதை! ராத்திரியிலே சோடா சேரிக்காது"

* * *

"எய்! ஆரம்பிக்கிறியா இல்லையா?......"

"ஆரம்பிக்கிலேன்னா ....டிக்கட்டை வாபஸ்பண்ணுடா!"

"அர்த்த ராத்திரியிலே ஆட்டம் போடுவானுவ போலிருக்கு"

"காலிப் பசங்கள்!.........எல்லோரும் விடாமல் கை தட்டுங்கப்பா.............அப்பதான் சீன் தூக்குவான்"

"எய்.........விசிலடிக்கத் தெரியுமா?"

"நல்லாத்தெரியும். அதுக்குத் தானே நான் டிராமாவுக்கு வர்ரது."

"அப்ப.......ஆரம்பிச்சிடு"

"ஷ்ஷ்ஷ்..............ஷ்.......

ஓஹோ ஹோ ஹோஹோ உஸ்... உஸ்....."

தேவி கானசபையில் "திரௌபதி வஸ்திராபகரணம்" நாடக ஆரம்ப தினத்தன்று நாடக நேரம் தவறி—நாழிகை நகர நகர ...நாலாபக்கங்களிலுமிருந்தும் கிளம்பிய பேரொலிகள் ஒன்றோடொன்று மோதித்தெறித்து அந்தக் கீற்றுக் கொட்டகையையே நடுங்க வைத்தன.

நாடக சம்பந்தமான ஒத்திகைகள் பார்ப்பதில் சுறுசுறுப்பு தேவையில்லை என்ற கொள்கையுடைய நாடக முதலாளி, நடிகர்கள் அலங்காரம் செய்து கொண்டிருக்கும் போதுதான் காட்சி ஒத்திகைகள் நடத்திக் கொண்டிருந்தார். அந்த அலட்சியத்தை அவர், தன் தொழில் மேதாவித் தனத்தைக் காட்டுகிறது என நம்பினர்.

இனி சமாளிக்க முடியாது என்ற ஆபத்தான கட்டத்தில்... நாடக மணி ஒலித்தது. முதற் காட்சி பஞ்சபாண்டவர் ஆலோசனை மண்டபம். அவசரத்தில் அர்ச்சுனன் 'கதை'யையும், பீமசேனன் வில்லையும் தூக்கிக் கொண்டுவந்து நின்றார்கள்.

"வீமசேனா" என்று தருமர் அழைக்கவும்......வில் வைத்த ஆசாமி அண்ணா என வணங்கவும், கொட்டகை பூகம்பத்தால் ஆடுவது போல சிரிப்பு முழங்கிற்று. திரை சடக்கென விழுந்தது. ஆயுதங்களை அவர்கள் சரிப்படுத்திக் கொண்ட பின் மீண்டும் திரை சுருண்டது. திரௌபதி குலுக்குநடைபோட்டுக்கொண்டு பிரவேசித்தாள். கொட்டகையில் அமைதி.

"ஆள்...நல்ல அழகப்பா!"

"ஆமாம்! பாத்திரத்திற்கேற்ற முக வெட்டு"

"அலட்சிய சிரிப்பு அப்படியே வழியுது பார்"

"வழியும் வழியும்!"

"என்னடா கிண்டல்?"

"கிண்டல் இல்லை.....குமார்! நாடகக்காரி மேலேயே இப்படியென்றால்......?"

"நாடகக்காரி யென்றால் மட்டமா? நளினம், நாகரீகம், பாவ உணர்ச்சி எல்லாம் அவளுக்கு அடிமை. வாழ்க்கையிலே சுவை வற்றிப் போகாமலிருக்க இவள் போன்ற கலையரசிகளின் காதலைத்தான் பெறவேண்டும்"

"அப்படியானால்—காதல் ஆரம்பமாகி விட்டதென்று சொல்லு"

"ஆமாம்! கன்னியொருத்தியைக் கண்டதும்," உள்ளம் களவு போவதுதானே காதல்."

"என்னடா கவிதை பொழிகிறாய்?"

"காதல் மழைபடா, செவிடு!"

"சரி.....பைத்தியம் முற்றி விட்டது"

"யார் பைத்தியம்? முட்டாள்! இது, கண்டதும் காதல்!"

"குமார்!"

"நடராஜ்! என்னை தொந்திரவு செய்யாதே.....உன் பேச்சைக் கேட்க நேரமில்லை... அவள் வாய் திறக்கப்போகிறாள்"

"இந்த எழுத்தாளர்களே இப்படித்தான்! முணுமுணுப்போடு நடராஜ் நாடகத்தை கவனித்தான்.

(7-ம் பக்கம் பார்க்க)

'தமிழரசு' கழகம் நமது பாதையிலே தடை கல்!



பன்னீர் செல்வம் நினைவு

★

செல்வத்தை நினைக்கையிலே சிந்திய கண்ணீர்த் துளிகள்!

★

கவிதையல்ல!
கண்ணீர்க்கடல்!

★

இருட்டறையில் இருகண்கள் மூடிக்கொண்டு,
உருட்டுகின்றார் உலகத்தார் என்றுசொல்வோர்
அழுந்தட்டும் அறியாமை! அதையுணர்த்த
முழங்கிற்று பெரியாரின் முரசஒலி
அவ்வழி வந்தோன்......அன்பன்.. தோழன்
அருமைச்செல்வம்......அறிவியக்க வீரன்
ஞாயிற்றின் நல்லொளியில்
ஆயிற்று காலமென்று அகன்றுவிடக் கருக்கல்,
அங்கே......
கிழக்கினில் கிளம்பிய காலைக்கதிரவன்
வெடுக்கென வீழ்ந்தான். கடலில் என்றால்,
வையம் கலங்காதோ? வாடி வதங்காதோ?
இருள் நீங்கி ஒளிபெறவே இந்நாடு முந்துங்காலை
மருள்சூழ்ந்த சாவுமேகம் இளங்கதிரை மறைத்ததுவே!

★ ★ ★

குன்றெடுக்கும் நெடுந்தோளான் தலத்தினனே!
கொன்றொழிக்கும் கொடுவாளால்...தன்னரி ஆரியத்தை,
தலைபிடுங்க தகைவிட்டு வெளிவந்த சிங்கஏறே!
மலைத்தோளா! மாணிக்கக் குன்றே!
பழச்சுளை. உன்பேச்சு! பார்வையிலே பனிவீச்சு!
பார்ப்பனீயம் உனைப் பார்த்துவிட்டால்
படைகண்ட கோழைபோல் நிலைதலைந்து போகுமே.
நீ போய்விட்டாய்...நின்னொடு நின புகழ்போமோ?
தீ வைத்தாய் ஆரியக்காட்டில்! அது
படபடென வெடிக்கையிலே பார்க்காமல் மறைந்துவிட்டாய்.
பன்னீர்ச்செல்வமே! உன் பால்வடியும்
முகமெங்கே? பாண்டியன் மீசையெங்கே?
பசியேறிய வெறிகடலின் பாழலைகள்
ஓய்ந்தனவா உனைத்தின்று!
"தின்னட்டும். தின்று மகிழட்டும்...என்னை
எண்ணட்டும் திருவிடத்தார்" என்றே எங்கொளிந்தாய்?
பணத்தினில் பிறந்து பணத்தினில் வளர்ந்தும்
பாட்டாளிக் குணத்தினை எங்ஙனம் கற்றாய்?
கோமானே! யாம் அழுதழுது உகுத்தகண்ணீர்
ஓமான்கடல் ஆயிரத்தை வெற்றி கொள்ளும்!
பழுதற்ற திராவிடப் பொன்னாடு! ஆரிய
மதுவுண்ட மக்களெல்லாம் விழித்தெழுதல்
இதுகாண்டல்..நின்பணித்த காணிக்கையாம்.
சுற்றி எதிர்ப்புகள் சூறவளியாய்ச் சீறிடினும்
வெற்றி எமக்கென்றே வெளிக்கிளம்பி விட்டோம்!
பஞ்சைகளல்ல நாங்கள்..........
தஞ்சைக் காவலன் சந்ததியார்!
வீழ்ந்திட நேரிடினும் நின் செயல்பாடி
வீழ்ந்திடுவோம்.

மு. க.

தடைக்கற்கள் உண்டென்றாலும் தடந்தோள்கள் உண்டு.

முரசொலி

பெரியார் ஆண்டு 69. பங்குனி 11
புதன் 24—3—48.

சிக்கலில் கனம் சுப்பராயன்!

"கருஞ்சட்டை ஸ்தாபனமென்ற பெயரால் தனிப்பட்ட ஸ்தாபனம் எதுவும் கிடையாதென்றும், இல்லாதவொரு ஸ்தாபனத்தின் மீதே சர்க்கார் தடை விதித்திருப்பதாகவும் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் அறிக்கை விட்டிருப்பதை சர்க்கார் உணருமா?"

தாயின்மேலாணை தந்தைமேலாணை தூய என் தமிழ்மேல் ஆணையிட்டே உரைக்கின்றேன் என... தணல்மொழி பேசி—சுழலும் சூறுவளிகளெனக் காட்சி தரும் திராவிட இளைஞர்கள் கூட்டத்திலே சர்க்காருக்கு தரப்பட்ட தாக்கீது அல்ல இது!

குமாரமங்கலம் கோமானை... குழப்பத்தில் ஆழ்த்திய இந்தக் கேள்வி சென்னை சட்ட சபையிலே எழுந்தது. கேட்டவர் அப்துல் சலாம்- "தெரியுமா?" என்றுகூட அவர் கேட்கவில்லை, "உணருமா?" எனக் கேட்டிருக்கிறார். "இந்த சர்க்கார் உணராது—உளறும்" என்பதற்கேற்ப சுப்பராயன் திகைக்க—சும்மா இருப்பதே சுகமெனுங் கொள்கைகொண்ட எம். எல். ஏக்கள் கூட திடுக்கிட்டு தவிக்க—சுற்றியிருந்தோர் மனதுக்குள் சிரிக்க—சபாநாயகர் குறுக்கிட்டு இது சம்பந்தமற்ற கேள்வியென்று சரியான (?) பதில் கூறினர்.

தோழர் ராசாகான், "கருஞ்சட்டையைசட்டவிரோதமாக்கியிருப்பதால் கறுப்பு சட்டை, கோட் முதலியவற்றைஅணிந்து கொள்பவர்கள் மேற்படி உத்தரவின் கீழ் வருவார்களா?" என ஒரு கேள்வியை வீசியிருக்கிறார். அந்த வீச்சு...உறுப்பினர்களின் கருவிழிகளையெல்லாம் பிடுங்கி, சபாநாயகரின் கறுப்பு அங்கியின் மேல் எறிந்திருக்கிறது கறுப்பு சட்டை ஸ்தாபனத்திற்கு தடை விதித்தவர்களின் தர்பாரிலேயே கறுப்பு அங்கி! அதுவும் சபாநாயகர் உடலில்! சபை சிரித்ததாம்.........சிக்கலில் மந்திரிகள் என, சபைமட்டுமல்ல; சென்னை மாகாணமே சிரிக்கிறது.

"மாகாணத்தில்இக் கருஞ்சட்டையினர் என்ன நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்?" சட்டசபை உறுப்பினர் தோழர் நடேச செட்டியார் கேட்கிறார் அதற்கு கனம்சுப்பராயன் "என்போன்ற திராவிடர்கள் ஆரியத்துக்கு ஆலவட்டம் பிடிப்பவராய்-திராவிட சமுதாயத்து விபீஷணர்களாய், விளங்குவதை—விபரீதமெனக் கூறி விளக்கவுரை யாற்றுகிறார்கள். இதுவே கருஞ்சட்டையினர் நடவடிக்கை" எனப் பதில் சொல்லித் தீரவேண்டும். ஆனால் அவர் சொல்லவில்லை.

"அதைவிளக்க இப்பொழுது என்னால் முடியாது" என்ற பதிலைப் படுதாவாகப் போட்டு செட்டியாரின் கேள்வியை மறைத்துவிட்டார் மந்திரியார். உண்மையைச் சொன்னால் உள்நாட்டிலாகா மந்திரி பதவிக்கு ஆபத்து!........தெரியாதெனக் கையை விரித்தாலும் நாடு சிரிக்கிறது. சிரிப்பா அது? சீறப்போகும் சிங்கங்களின் எளனம் என்பதை சுப்பராயனே அறிவார். ஆனாலும் என்செய்வார்? சிக்கலில நிற்கிறார்!

"கருஞ்சட்டை ஸ்தாபனம், வகுப்புவாத ஸ்தாபனமா? அரசியல் ஸ்தாபனமா?" சட்டசபையில் தோழர் டி. வி. ராமசாமி கேட்க...அதற்குமாத்திரம்கனம் மந்திரியார், அழுத்தந் திருத்தமாக "நிச்சயமாக வகுப்புவாத ஸ்தாபனமே!" என்று விடையிறுத்து வெற்றிச் சிரிப்புடனே விளங்கினாராம். உடனே தோழர் டி. வி. ராமசாமி கேட்டிருக்க வேண்டும்—அவர் கேட்கவில்லை. இதோ நாம் கேட்கிறோம்; திராவிட பெருங்குடிமக்கள் சார்பிலே நின்று கேட்கிறோம்; ஆலயத்திலே நுழைய—ஆண்டவனைத் தொட அருகதையற்ற அடிமைகளின் சார்பிலே நின்று கேட்கிறோம்; அக்கிரகாரத்திலே நடமாட முடியாத சண்டாளர்களின் சார்பிலே நின்று கேட்கிறோம்; 'பிராமணளுக்கு மாத்திரம்' என்ற பலகையை பார்ப்பன உணவுச்சாலைகளில் பார்த்து பல்லிளித்து நிற்கும் பாமரப் புழுக்களின் சார்பிலே நின்று கேட்கிறோம்; பொட்டுப் பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய், தொங்கும் நரம்பின் தூள்களாய்: துவண்ட வாழ்வு நடத்தும் திராவிடத் தொழிலாள வர்க்கத்தின் சார்பிலே நின்று கேட்கிறோம்; அய்யா...அமைச்சர் பெருமானே!... ஆயிரமேனிகது சாதி.....அதை அழித்திடுதல் நீதி யெனக்கூறிடும் கருஞ்சட்டையினர் வகுப்புவாதிகளா?... அடுக்குமா இது?...வகுப்புக்கள் ஒழிந்தால் வாதம் ஒழியும் என

பாலுக்குவாடிபல ஆயிரஞ் சிசுக்கள் மாண்டிடவே

வைத்திய நூல் வரைந்து வழங்கிடும் வைக்கத்து வீரரின் இயக்கமா வகுப்புவாத இயக்கம்?... வாய்மையாகாதே தங்கள் பேச்சு!...பொய்யைப் பிழைப்பாகக் கொள்ளும் புல்லர் சமுதாயத்தில் நீங்கள் பிறக்கவில்லையே......பிறகு எப்படி அடித்தது இந்த விஷவாடை? இது விபரீத புரித்து வழிகாட்டுமே! விநாசகாலத்திற் கென்றமைந்த வீநந்தை சாப்பிடுவது விவேகிகளுக்கு அழகல்லவே!.....

சுப்பராயன் சூரப்புலியாயிருந்தாலும், சுந்தராங்கத மனமோகனராயிருந்தாலும் சுட்டுவிரல் ஆடினால் சுட்டுத்தள்ளு என்ற அதிகார பீடத்திலமர்ந்திருக்கும் அமைச்சராயிருந்தாலும் சூத்திரர்தான் என்று மனுநீதியமைத்துள்ள அந்த மாமிசமலைகள் வகுப்புவாதிகளா? அல்லது மாடென உழைத்து, ..மண்டை போடும் வரையில் தொண்டுசெய்யும் அடிமைகளாய் உழன்று, அல்லற்படும் திராவிட சமுதாயம் அரசுபெறப் பணிபுரியும் கருஞ்சட்டையினர் வகுப்புவாதிகளா? அமைச்சர் ஏறே! அருள் கூர்ந்து பதில் கூறுங்கள். சிக்கலான கேள்வி! சரியான பதில் சொன்னால் சிம்மாசனம் போய்விடும். என் செய்வீர்கள் ......"பாபம்"!........

கருஞ்சட்டை ஸ்தாபனம்—வகுப்புவாத ஸ்தாபனமென வாய் கூசாது பதில் தந்த மதியூக மந்திரியாரே!...."மகாத்மா"வைக் கொன்ற கோட்சேயின் செயலை மறந்துவிடுவோம். கோட்சே ஒரு பார்ப்பனன் என்ற உண்மையைக் குறிப்பிடுவது வகுப்புவாதமென்றால் அதையும் நிறுத்தி விடுவோம். நம் மானத்தைப் பறிக்கும் நிகழ்ச்சி—மறக்க முடியாத நிகழ்ச்சி—மறந்தால் அவனை மனிதனென்றெண்ண முடியாத நிகழ்ச்சி—மன்னார்குடியிலே மாணவர்கள் நடத்திய விருந்தொன்றிலே நடைபெற்றிருக்கிறதே; அதைக் கண்டிப்பது கூட வகுப்புவாதமா?

மன்னார்குடி பிண்லே ஐஸ்கூல் ஆறும் உயர் வகுப்பு மாணவர்கள் பள்ளி வாழ்வு முடிந்து ..ஆசிரியர்களை விட்டுப் பிரிகிறபோழ்து தங்கள் அன்பைக் காட்டிக்கொள்ள விருந்தொன்று அமைத்தனர். ஆரிய திராவிட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். விருந்து தயாரிப்பு தமிழர் சிற்றுண்டி விடுதியினரால்!

விருந்துக் கூட்டத்தில் ஆசிரியர்கள் அமர்ந்தனர். சுவைத்தல் ஆரம்பமாயிற்று! அதில் பதினாறு பேரின் தட்டுகளில் பலகாரம் குறையவில்லை. சூத்திரச் சாலையில் தயாரித்த சிற்றுணவைத் தீண்டுவதே பாபமென எண்ணினர். வாழைப்பழங்கள் சாப்பிட்டதோடு எழுந்துவிட்டனர்.

அந்த பதினாறுபேரும் பார்ப்பனர்கள். பள்ளியிலே மாணவருக்கு தீண்டாமையொழிப்பை பிரச்சாரம் செய்பவர்கள்; நந்தன் கதை நவில்பவர்கள்; திருப்பாணாழ்வாரின் திவ்ய சரித்திரத்தை தித்திக்கும் தீந்தமிழில் கற்பிப்பவர்கள்—அந்தத் திருக்கூட்டத்தார் "தீண்டினால் திருநீலகண்டம் இது திராவிடன் தயாரிப்பு" என்று கருதிய அந்த நிகழ்ச்சி சுப்பராயன் காலத்திலே தான் நடக்கிறது .....ஆம் 1948 பிப்ரவரியில்! சுப்பராயன் ஆட்சிக்குட்பட்ட இடத்திலே தான் நடக்கிறது...சென்னை மாகாணத்தில்! திரு இடத்தில்! திராவிடர்க்குச் சொந்தமான நாட்டில்! இந்தப் பதினாறுபேரும் வகுப்புவாதிகளா? அல்லது "இது நீதியா? தருமா? முறையா?" என கண்ணீரும—அதை ஆவியாக்கும் கனலும், ஒரே சமயத்தில் கிளம்ப—துடிதுடித்து நிற்கும் கருஞ்சட்டையினர் வகுப்புவாதிகளா?.....

சட்ட சபையிலே தோழர் டி. வி. ராமசாமி கேட்காததை நாம் கேட்கிறோம். கனம் சுப்பராயன் அவர்கள் ஒழுங்கான பதில் சொல்லிவிட்டு..காங்கிரசிலிருந்து ஒதுங்கி விடுவாரா? அல்லது பதவி போய்விடுமே என்பதற்காக பதில் சொல்லப் பயந்து சிக்கலிலேயே நிற்பாரா?

★ ★

முழுதும் உணர்ந்த முதலமைச்சரே,
கவிஞரு திராவிடர் கழகத்தின் மேல்
இன்னும் கொஞ்சம் எரிச்சல் கொள்க"
[குயில் ஏழாவது சூலில் வெளியாகும் பாடலின்பகுதி]

குயில்
திங்கள் தோறும் தீந்தமிழ்
விருந்து அளிக்கிறார் கவிஞர்
பாரதிதாசன்.

தனிப்படி அணா 6. அஞ்சல் வழி 0—6—9.

குயில், பாரதிதாசன் பதிப்பகம் புதுச்சேரி.

பழனிவேலா! உனக்கு பாற்குடங் காவடியா?

போடு துருப்பை!

திருவாரூர் முனிசிபல் வாசகசாலைக்கு முரசொலி வாங்க வேண்டுமென வாசகர்கள் மனுச் செய்துகொண்டிருந்தனர். முரசொலி, வகுப்புவாதப்பத்திரிகை, அதை வாங்குதல் கூடாதென ஒரு முப்புரிநூல் உறுப்பினர் விளக்கம் கூறினாராம். ஜாதிச் சீட்டு இருக்கும்போதே துருப்பு சீட்டைப் போட்டு வெட்டும் சூதாடியின் நிலைமைக்கும், எப்படியாவது முரசொலி வாங்குவதை மறக்க வேண்டுமென "வகுப்புவாதபத்திரிகை" என்று வாய் கூசாது கூறிய உறுப்பினருக்கும் வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. தோழர் R. சிங்கம் அவர்கள் வாதாடியுங் கூட வெற்றி அவர்களுக்குத் தான்! வாசகசாலைக்கு வருகிற விடுதலை, திராவிடநாடு ஏடுகளை பார்ப்பன வகுப்பு பத்திரிகைகள் என எண்ணிவிட்டார் போலும் உறுப்பினர்! "பாவம்" பரிதாபத்திற்குரியவர்!

விசயராகவன் இலக்குமிதேவி
வாழ்க்கை ஒப்பந்தம்.

21—3—48 நாகை ராயல் இல்லத்தில் தோழர் R. V. கோபால் அவர்கள் தம்பி, டாக்டர் விசயராகவன் அவர்கட்கும் தோழியர் இலக்குமிதேவி அவர்கட்கும் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் தீப்பொறி ஆசிரியர். C. P. சின்னராசு, திராவிடன் ஆசிரியர் N. V நடராசன் ஆகியோர் பேசினார்கள். பலர் வாழ்த்திதழ்களும் பரிசும் வழங்கினர்.

திராவிட ஏழை மாணவர்
கல்வி உதவி நிதி,
சாக்கோட்டை.
(வழி) கும்பகோணம்.

பேரன்புடையீர்!

இந்நிதியின் உதவியால் 1944ம் ஆண்டு, நவம்பர் முதல் ஓர் இலவச பாடசாலை நம ஏழை மாணவர்களுக்கு தொடங்கப்பெற்று நடைபெற்று வருகிறது. இதில் பயிலும் சுமார் 100 மாணவ—மாணவிகளுக்கு இனிய கல்வியும், இசையறிவும், நடிப்பு முறையும், வெளி விஷய ஞானமும், தேகப் பயிற்சியும், சொற்பொழிவாற்றுந் திறமையும், குசதறிவுப் பாடல்கள பாடங்களும காண்போர் மனமகிழும் வண்ணமும், பயனுள்ள வகையிலும் போதிக்கப்படுகின்றன

சாமான்கள், கட்டிடம் அடிக்கடி அதிகமாகத்தேவைப்படுகிறது. ஆகவே, இந்நிதிக்கு உதவினால் மேற்கூறிய ஏழை மாணவர்களுக்குப் பயனளிக்கும் என்பது திண்ணம். எனவே ஒவ்வொரு தமிழரும், செல்வரும், அறிஞரும் இதற்கு உதவ வேண்டுகிறோம். ஆலோசனை கூற வேண்டுகிறோம். இப்படிக்கு,

S. R. சாமி, காரியதரிசி.

"கண்டதும் காதல்"

ஆலோசனையற்ற இந்த அவசரக் காதலை அறவே அழிக்கும் வகையில் ஒரு பக்கத்திற்கு மேற்படாமல் தீட்டப்படும் கற்பனைச் சித்திரங்கள் முரசொலியில் வரவேற்கப்படும்.

அவர்களே.....!

நாசிக் சோஷியலிஸ்டு மாநாட்டின் தீர்மானத்தின்படி தோழியா அருணா ஆசப் அலி உள்ளிட்ட பிரபல காங்கிரஸ் தொண்டர்கள் 150 பேர் காங்கிரசை விட்டு ராஜிநாமா செய்துவிட்டனர்.

விவாகரத்து.

காங்கிரசிலிருந்து ஏப்ரல் 15ந் தேதியுடன் தாங்கள் விலகிவிடுவதென சோஷியலிஸ்டுகள் முடிவு செய்துள்ளனர்.

18-வது மாநாடு.

தூத்துக்குடியில் நடந்த திராவிடர் கழக 18-வது மாகாண மாநாட்டின் வரவேற்புக் குழுவில் வரவேற்பு கமிட்டி தலைவர்களாக தோழர்கள் E. V. A வள்ளிமுத்து, நீதிமாணிக்கம். செயலாளராக K. V. K. சாமி உதவி செயலாளர்களாக N. V. நடராசன், P. S. சண்முகம், சிவ சண்முகசுந்தரம். பொருளாளராக V. V. தனுஷ்கோடி B. A. தொண்டர் தலைவர்களாக M. R. ராதா, C. அருணாசலம். விளம்பர அதிகாரிகளாக து. இரத்தினம், P. M. சண்முகம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சாமியின் அன்னை.

கடந்த 13-3-48ல் குடந்தை S K சாமி அவர்களின் தாயார் காளிமுத்து அம்மாள் அவர்கள் இயற்கை எய்தினார்கள். செய்தி கேட்டு வருந்துகிறோம். சாமியின் குடும்பத்தாரோடு சோகத்தில் பங்கு பெறுகிறோம்.

இழிவுதனைக்காட்ட இன்றே கறுப்புடை அணிக!

(2-ம் பக்க தொடர்ச்சி)

குமார், புயலும் படகு மானான்.

"இந்த முட்டாள் தருமன் ஒரு மரக்கட்டை மகாராஜா! தங்க விக்கிரகம் வந்து நிற்கிறது ...தாவிடாமல் தர்பார் நடத்துகிறானே" என ஏளன மொழி பேசிற்று அவன் உள்ளம்.

"நான் மட்டும்...தருமனைப்... தருமன் என்ன...சகாதேவனைப் நடித்தால் கூட......போதும... இந்நேரம் இந்த சிங்கார மயிலை! ......"

குமார், சுரக்கும் உமிழ்நீரை உறிஞ்சிக் கொண்டான்.

"சரி...நாளைக்கே இந்த சபாவில் ஒரு நடிகனை சேர்ந்து விடுவது!" ஒரு மகோன்னத முடிவைக் கண்டுபிடித்ததுபோல அவன் தலை நிமிர்ந்து கொண்டது.

வீமசேனனிடம் வசனம் முடிந்த பிறகு, தருமர் திரௌபதியை நோக்கினார். திரௌபதி வணங்கி நின்றாள். மலர்ந்த முகத்தோடு தருமர்...அவளைப் பார்த்து "அன்பே சீதா! அருகில் வா" என்று......முடிக்கவில்லை......கொட்டகை, "சே! உள்ளே போடா!" என்று சிரித்தது.

முதல்நாள்நடந்த "ராமாயண" நாடக வசனத்தை தருமர் வேடம் போட்டவர் இப்போது தவறிச் சொல்லிவிட்டார் என்று ......யாரும் மன்னிக்கத் தயாராயில்லை. கொட்டகை, தருமருக்கு தடையுத்தரவு போட்டதும்...... அவர் மௌன விரதம் ஆரம்பித்து விட்டார். மிரள விழித்தபடி திரௌபதி நின்றாள். தருமர் வசனத்தை நாமாவது பேசுவோமென்று... அர்ச்சுன வேஷக்காரன்;...... "அன்பே திரௌபதி அருகில் வா!......என் தம்பி அர்ச்சுனன் திக்விஜயம் செய்யப் போகிறான்..............." என்று ஆரம்பித்தான்......

"ஏய்! நீயும் உள்ளே போ!" கொட்டகை ஆத்திரத்தோடு உத்திரவிட்டது.

நாடக முதலாளி புஷ்பாகம் பிள்ளை மேடைக்கு ஓடி வந்து... ......"சகோதார்களே!" என்று எடுத்தார்.

"அஞ்சு சகோதரர்கள் அசையாமல் நிக்கிறாங்கோ......அவுங்களுகிட்டே பேசப்பா!" என்று குரல் கொடுத்தது கொட்டகை.

ஐவரும் உள்ளே ஓடினர். "ஏய்! பஞ்சபாண்டவர் ஓட்டம். திரௌபதி தனியா நிற்கிறாள் பிடி! பிடி!" கொட்டகையில் கெக்கலிப்பு!

திரௌபதியும் உள்ளே ஓடினாள். திரை விழுந்தது. கொட்டகையில் 'யாரும் உட்கார்ந்திருக்கவில்லை. முன் திரையில் காட்சியளித்துக் கொண்டிருந்த காளிகாதேவியின் முகத்தில் ஒரு கல்வந்து விழுந்தது. "ஐய்யோ முறையோ" வெனக் கூவியபடி பெண்கள் திசைகெட்டு ஓடினார்கள்.

கீற்றுகளைக் கிழித்துக் கொண்டு கற்கள் உள்ளே நுழைந்து கொண்டிருந்தன. நாடக முதலாளி ஒலிபெருக்கி மூலமாக உள்ளிருந்தபடி கத்தினார். பயனில்லை. "நீங்களெல்லாம் மனிதர்கள் தானா?" என்று ஒலிபெருக்கி கேள்வி போட்டது அதற்குப் பதில் வரவில்லை. ஆனால்......ஒலிபெருக்கி மட்டும் உடைந்து விழுந்தது. காவற்காரர்களுக்கும் பொது மக்களுக்கும் கை கலப்பு.

"டேய் பாரத யுத்தம்!" என்றான் ஒரு கிண்டற்கார தடியன். இதற்குள் யாரோ ஒருவன் நெருப்புக் குச்சிக்கும் வேலை கொடுத்துவிட்டான். "லங்கா தகனம்" நாடகம் ஆரம்பமாயிற்று. தீ வளர்ந்து, தாவியது. முதலாளியைக் காணவில்லை. காளிதேவி திரை தீப்பிடித்துக் கொண்டது. கொட்டகை முறிந்து எரிந்தபடி சாய்ந்தது. பக்கத்திலிருந்த வயற்புறத்தை நோக்கி நடிகர்கள் சிதறினர். 'நடராஜ், நடராஜ்!' என்று கத்திப்பார்த்தான் குமார். தன் உள்ளக் கோயில் கொண்ட அந்தக்குயில், வெந்து கருகிவிடுமோ என்ற குமுறல் எழுந்தது அவனுக்கு! என் கோமளவல்லி எங்கேயென ஓடினான். அப்போது தான் திரௌபதி சிங்காரிப்பு அறையை விட்டுப் பறந்து கொண்டிருந்தாள்...... அவனும் தொடர்ந்தான். கொட்டகையில் தீ! குமாரின் இதயமெலாம் தீ!......அந்தத் தீ—தீங்கனியாக மாறப் போகிறதென்ற ஆசை அவனைக் காற்றுக்கிற்று. ஓடிக்கொண்டேயிருந்த திரௌபதி ஒரு வாய்ப்பில தடுக்கி விழுந்தாள். அவனும் விழுந்தான். அவன் இதயராணிக்குப் பேச்சு மூச்சில்லை. தன் மடியில் சாய்த்துக்கொண்டு அவள் கன்னங்களைத் தடவிக்கொடுத்தான். துண்டை எடுத்து முகத்தில விசிறினான். நெஞ்சைத் தடவிக்

(8-ம் பக்கம் பார்க்க)

சாக்கடைக்குப் பெயர் சாபவிமோசன தீர்த்தமா?

(7-ம் பக்க தொடர்ச்சி)

கொடுத்தான். சில நிமிடங்கள் ஆனந்த மௌனம்.

"கண்ணே!"

கட்டு மீறி யெழுந்த அந்த வார்த்தை, ஒரு பெருமூச்சுடன் கலந்து கொண்டது. அவன் கலியாணியின் தலையை மெதுவாக உலுக்கினான். திரௌபதி...... தெளிவுபெற்று விழித்தாள். எழுந்து உட்கார்ந்தாள். வெகு தூரத்தில் எரிந்து கொண்டிருந்த கொட்டகையின் செக்கிற ஒளியில், தன் காதலியின் தங்க மேனி மெருகேறுவதை ரசித்தபடியே குமார் அசைவற்று விட்டான்......

அவள் நன்றாக நிதானம் பெற்றுவிட்டாள். குமாரின் குதூகலம் கொள்ளிடத்து வெள்ளமாயிற்று. "கண்மணி!" என்று அவளைக் கட்டியணைத்தான்...

திரௌபதி சிரித்துக்கொண்டே...தன் தலையில் கை வைத்தாள்.

"டோப்பா" கையோடு வந்தது. சிரைப்புவைத்த திரௌபதி! குமார் குழம்பிவிட்டான். ..."கண்மணி அல்ல.....என் பெயர் கங்காதரன்" என்று சொல்லிக்கொண்டே திரௌபதி சேலையை அவிழ்த்து வீசியெறிந்தாள்.

வேட்டிகட்டிய கங்காதரன் நின்றுகொண்டிருந்தான்,

திரௌபதி காணப்படவில்லை.

திரௌபதி வஸ்திராபகரணம் வயற்புறத்தில் நடந்துவிட்டது.

"ஆணையா காதலித்தாய்? அட அசடே" என்றது குமாரின் மனம்.

"கண்டதும் காதல் ஒழிக!" என்ற பெருங் கூச்சல் குமாரையும் அறியாமல் கிளம்பிற்று. ★

பசுவைக் கொன்று...

பையனைப் பள்ளிக்கனுப்புவதே பாபமென எண்ணியிருந்த பெற்றோர்—அந்தப் படுபாதகக் கொள்கையிலிருந்து கரையேறிக் கல்வியே கருந்தனமெனக் கண்டு, மக்களை அறிவுச்சாலைக்கு அனுப்பிவைக்கும்போது பொருளாதார நெருக்கடி பிடரியில அடித்து நிறுத்துகிறது. அதையும் சமாளித்து கடன்பட்டாகிலும் கல்விச் செல்வம் பெற்ற குழந்தைகளைக் காண விழையும்போது பயிலும் கூலி உயர்த்தப்பட்டு விட்டது. எட்டு மாதங்கள் சம்பளம் என்பதை பத்து மாதங்களாக ஆக்கியுள்ளனர். காரணம் கேட்டால ஏழை மாணவர்களுக்கு உதவி செய்ய இந்த ஏற்பாடு எனப் பதில் வருகிறது.

எம். எல். ஏக்கள்—சீமான்கள்—இவர்களின் சிபார்சுபெற்ற செல்வர் வீட்டுக் குழந்தைகள் அரைச்சம்பளம், இனம் படிப்பு ஆகிய வசதிகளைப் பெறுகிறார்களேயல்லாது ஏழை வீட்டுப் பிள்ளைகள் பக்கம் சலுகை தலை நீட்டுவதேயில்லை.

திராவிட ஏழைப்பெற்றோர்கள் கள்ள மார்க்கெட் செய்ய முடிகிறதா? அல்லது ஆற்றங் கரையில அமர்ந்து ஆடாமல அசையாமல் தர்ப்பணத்துக்கு தக்ஷணை வாங்க முடிகிறதா? வயலில் வாடி—வாழ்வில வதங்கிக் கிடக்கும் வறுமைக் குடும்பங்களில்—இனியாவது வாழ்வு நுழைய வேண்டுமானால்—படித்த பிள்ளைகள் தேவையல்லவா? அந்தத் தேவையை நிவர்த்திக்க எட்டுமாத சம்பளத்தை பத்துமாத சம்பள

1-ம் பக்க தொடர்ச்சி

மறந்து பிதற்றும் பிதற்றல். இதுதான் இவ்விரண்டு சம்பவங்களுக்குமுள்ள வித்தியாசம்.

அதாவது நரம்புச் சோர்வை உண்டாக்கிக்கொண்ட நிலையை பிரமத்தோடு ஐக்கியமென்று பிதற்றுவதே யாகும். படங்களில் மகாவிஷ்ணு லட்சுமி சமேதராய் கருட வாகனருடராய் வரைந்துள்ளதை பார்க்கின்றோர். இதனையே நினைக்குங்கால் அந்த மாதிரி பக்தர் கண்களுக்குத் தோன்றுகின்றது. இதைத்தான் பக்தாகள் காணும் அருள் தோற்றமென்பர். சைவ புராணங்களில் கூறியுள்ள அருள் தோற்றங்கள் பகற்கனவுகளிலே சேர்ந்தவைகளே.

பக்தர் கண்களுக்குத்தோன்றும் கடவுள் பிரசன்னங்கள் யாவும் கட்டையைக் கள்ளனென்றுபாவிக்கும் மனப்பான்மையால் உண்டான காட்சிகள் என அறிக.

இவ்விதக் காட்சிகளை Hallucination என்றும் Day dream) பகற்கனவென்றும் மெய்ஞ்ஞானிகள் கூறுவர்.

(M. சிங்காரவேலு)

மாக்குவது தானா வழி? 'இந்த திட்டம் ஏழை மாணவர்க்குத் துணைபுரிய,' என்று சொல்லப்படுகிற சமாதானம் "பசுவைக் கொன்று செய்யப்படுகிற செருப்புதான்" மாகவே முடியும் என்பது நமது கருத்து.

மாணவர் கழகங்களும், பெற்றோர் கழகங்களும் விடுக்கும் வேண்டுகோள் வெற்றியை அளிக்குமென நம்புகிறோம்.

"நடப்பது நமது ராஜாங்கமாயிற்றே" என்று பெற்றோர்கள் பேசுவதற்க்க பயப்படலாம். திராவிட மாணவர் கழகம் உடன் செயலில் இறங்கவேண்டும்.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: மு. கருணாநிதி, திருவாரூர்.
அச்சிடுபவர்: கருணை. எம். ஜமால், கருணாநிதி மின்னியக்க அச்சகம், விஜயபுரம்.